தின இதழ்
சென்னை | திங்கள், ஏப்ரல் 7 2014

# மரக்கன்றுகளே எனது விருதுகள்

பால கணேசன்

**தற்போதைய சுற்றுச் சூழல் பாதுகாப்பின்மைக்கு மக்களிடம் அதுகுறித்த விழிப்புணர்வு இல்லாததே காரணம். நம் வீட்டில் இருக்கும் ஒரு மரத்தை வெட்டுவதால், இந்த உலகம் அழிந்துவிடப் போகிறதா என்ற அலட்சியத்தால்தான் இப்போது உலக வெப்பமயமாதல் பீதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால், மக்களிடையே இதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறார் கோவையைச் சேர்ந்த யோகநாதன்.**

கோவை காந்திபுரத்திலிருந்து மருதமலை செல்லும் '70ம்' நம்பர் பஸ்சின் நடந்துனராக பணிபுரிந்து வருகிறார் இவர். சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்த இவரது சேவைக்கு துணை ஜனாதிபதியிடம் விருதை பெற்றுள்ளார். 3 லட்சத்துக்கும் அதிகமான மரக்கன்றுகளை நட்டு சுற்றுச்சூழல் பாதுகாவலராக திகழ்பவர் தான் யோகநாதன். மயிலாடுதுறையில் இருந்து நீலகிரிக்கு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களாக இடம்பெயர்ந்தது இவர்களது குடும்பம்.

மலை, மரங்கள் நிறைந்த பகுதியில் இருந்ததால் தானே என்னவோ மரங்கள் மீது தீராத பற்று உடையவராக இருக்கிறார். ஒரு சாதாரண பஸ் கண்டக்டராக இருந்து கொண்டு எப்படி 3 லட்சம் மரக்கன்றுகள் நட முடியும்? பணம் இருந்தால் தான் எதுவும் முடியும் என இல்லாமல் மனம் இருந்தால் போதும் என செயல்பட்டிருக்கிறார்.

தினமும் வேலைமுடிந்து செல்லும் போது ஹோட்டல்களில் உள்ள பால்கவர்களை சேகரிக்கிறார். பின்னர் தொடர்ந்து மரத்திற்கான விதைகளையும் சேகரித்து கொள்கிறார். கணபதியில் உள்ள பெஸ்ட்டூல்ஸ் என்னும் நிறுவனம் இவருக்காக கொஞ்சம் இடத்தை தந்து உள்ளார்கள். அதில் அவர் சேகரித்த விதைகளை நடவு செய்கிறார்.

பின்னர் துளிர்விட்ட மரக்கன்றுகளை நட மாணவர்களை தேர்வு செய்கிறார். எங்கு மரக்கன்றுகள் நடவேண்டுமோ அங்கு உள்ள மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மரக்கன்றுகள் நட வேண்டிய அவசியத்தை முதலில் விளக்குகிறார். இதனால் மரக்கன்றுகள் நடுவது மாணவர்கள் உதவியுடன் சிறப்பாக முடிகிறது.

மரக்கன்றுகள் நடும்போது போட்டோவுக்கு போஸ் கொடுத்து செல்லும் வி.ஐ.பிக்கள் போல் இல்லாமல், தொடர்ந்து ஒரு ஆண்டு வரை மரக்கன்றுகளை பாதுகாக்கிறார். இவரின் ஆர்வத்தை பார்த்து தற்போது ரோட்டரி சங்கங்கள் மற்றும் தனியார் அமைப்புகள் 10 ஆயிரம், 5 ஆயிரம் மரக்கன்றுகள் என இவரிடம் தருகின்றனர். இவ்வாறு கோவை, நீலகிரியில் ஆரம்பித்து தமிழகம் முழுவதும் மரங்கள் நட்டுள்ளார். சி.என்.என்.ஐ.பி.என். சேனல் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் 25 நபர்களுக்கு விருது வழங்கி சிறப்பிக்கும். இதில் 2011ல் சுற்றுச்சூழல் தொடர்பான விருதை பெற்றவர் யோகநாதன் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுமட்டுமின்றி மத்திய, மாநில மற்றும் பல்வேறு அமைப்புகள் நடத்தும் சுற்றுச்சூழல் தொடர்பான பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார். 'ரியல் ஹீரோ' விருதை பெற்ற தமிழன் என நம்மை பெருமைப்பட வைக்கிறார்.



மரங்கள் எங்கு வெட்டப்பட்டாலும் அதனை தடுக்கும் முதல் நபராக இருந்து வருகிறார். நீலகிரியில் தேயிலைத் தோட்டங்களில் உள்ள மரங்கள் மற்றும் கோவை மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்காக வெட்டப்படும் மரங்கள் என எங்கிருந்தாலும் ஓடி சென்று தடுத்து பல வழக்குகளை இன்றும் சந்தித்து வருகிறார். வெட்டப்படும் மரங்களின் மீதான தனது ஆதங்கத்தை 'மூச்சுக் காற்று' எனும் புத்தகத்தில் பதிவு செய்துள்ளார்.

தேசிய நெடுஞ்சாலைகளில் மரங்களை வெட்டாமலே கிளைகளை ஒழுங்குப்படுத்துவதன் மூலமே இதற்கு தீர்வு கண்டிருக்க முடியும். ஆனாலும் எவ்வளவு முயன்றும் பல சாலைகளில் உள்ள மரங்களை காப்பாற்ற முடியவில்லை என ஆதங்கப்படுகிறார்.

வளர்ச்சி பணிகளுக்காக மரங்களை வெட்டுவதை தடுத்தால் கிரிமினல் வழக்கு தொடரப்படும் என கோவை மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மரங்கள் வெட்டுவதை தடுக்க இயலாமல் செய்து விட்டனர். டாப்சிலிப் பகுதியில் 14 லட்சம் தேக்கு மரங்கள் வெட்டப்பட்டது. மலைவாழ் மக்களுக்காகவும், மலை வழிப்பாதைகளுக்காகவும் மரங்கள் வெட்டப்பட்டதாக அரசு தரப்பில் தெரிவித்ததாக வருத்தப்பட்டு சொல்கிறார்.

நீலகிரி மாவட்டத்தில் இந்தியாவின் இரண்டாவது சிரம்புஞ்சியாக விளங்கும் தேவாலா எனும் பகுதியில் உள்ள மக்கள் குடிநீரை 5 ரூபாய் கொடுத்து வாங்கும் பெரும் அவலம் உள்ளது. அங்கேயே அந்த நிலை என்றால் வருங்காலத்தில் நமது நிலைமை? நொய்யல் ஆறு இறந்து போகாமல் காப்பாற்ற அதன் பாதைகளை சீரமைக்க வேண்டும். அவ்வழியே உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். 27 யானைகள் செல்லும் வலசுபாதைகளை ஆசிரமங்கள், கல்விநிறுவனங்கள், தொழிற்கூடங்கள் ஆகியவை ஆக்கிரமித்து உள்ளன.

யானைகளுக்கு வாழ்நாள் முழுவதும் நினைவாற்றல் உண்டு. எனவே வலசைபாதைகள் அழிக்கப்பட்டால், அவை என்ன செய்யும்? அவை நம்மிடங்களுக்கு வந்து தான் தொந்தரவு செய்யும் என கேள்வி எழுப்புகிறார்.

அரசு ஊழியராக பணிபுரிந்தாலும் இதுவரை இவர் வாங்கிய போனஸ் பணம் வீடு போனது கிடையாது. எல்லாம் இந்த மரங்களுக்கு தான் செலவு செய்திருக்கிறார். தனக்கு 2 மகள்கள் இருந்தாலும் மரங்களை கவனிப்பதிலே கவனம் செலுத்தி வருகிறார்.

இவரது சமீபத்திய தேடலின் விளைவு, மரங்களை பாதுகாக்க 15 நாள்களுக்கு ஒரு முறை நீர் ஊற்றும் முறையை கண்டறிந்து உள்ளார். அதாவது 3 பிளாஸ்டிக் கேன்கள், அவற்றில் கூழங்கற்கள், தேங்காய் நார்கள் அதில் 1 லிட்டர் தண்ணீரைக் கலந்து துணியால் கட்டிவிட்டு மரம் உள்ள பகுதியில் வைத்து விட்டால், 15 நாள்களுக்கு மரம் வறட்சியில் சிக்காமல் மரத்திற்கு சீராக தண்ணீர் கிடைக்கும் என்கிறார்.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட விருதுகள் பெற்றுள்ளார். "மரங்களினால் மட்டுமே மக்களுக்கு மகிழ்ச்சி கிடைக்கும். ஆகையால் எனக்கு கொடுக்கும் விருதுக்குப் பதில் மரங்களைத் தாருங்கள்" என்கிறார் யோகனாதன். இவரை போன்ற மனிதர்களால்தான் இயற்கைச் சூழல் கொஞ்சமாவது உயிர்ப்புடன் இருக்கிறது என்றால் அது மிகையாகது.



